உ
சிவமயம்

REGISTERED AS
NEWSPAPERINA
GEYLON
P. M. G. NO. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ மார்கழி மீ உஉ உ (1948 ஜனவரி 6 செவ்வாய்க்கிழமை) [ இல எரு

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

உள்வாய பதிமிளிரும் வளர் சடையி ஞானை
மறையவனை வாய்மொழியை வானவர்தங் கோனைப்
புள்வானயக் கீண்டுலகம் விழுங்கியுமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தி ஞனை
முள்வாய மடல்தழுவி முடத்தாழை யீன்று
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய சருங்குவளை கண்வளருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழுதேனே.

— சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

# சைவமே மெய்ச்சமயம்

( திரு. T. S. கந்தசாமி முதலியார் M. A. )

கோயமுத்தூரிற் சென்றவாரம் சைவசித்தாந்த மகாசமாஜத்தாதரவில் நிகழ்ந்த சைவர் மகாநாட்டில் தலைமைவகித்த வழக்கறிஞர் உயர்திரு T. S. கந்தசாமி முதலியார் M. A. அவர்கள் செய்த பிரசாரணத்தின் ஓர் பகுதியைக் கீழே தருகின்றோம்

பற்பல நூற்றாண்டுகட்கு முன் சைவம் இமயம் முதற் குமரிவரையும் அரசுசெலுத்துக் கொலுவீற் றிருந்தது. அவற்றையெல்லாம் தழுவித் தலைமை கொண்டிருந்தது. அக்காலை எல்லா மக்களும் இன்புற்று வாழ்ந்தனர். கடவுட் பற்றே சமயத்திற்கு உயிர்நிலை. கடவுட் பற்றுடையார், உயிர்களிடத்து அன்புடையரர் அன்புற்று வாழ்தல்தான் உலகத்து மக்கள் இன்புற்று வாழ்தற்குரிய நெறி. அன்புற்று வாழ்தலே வீடடைவிக்கும் நெறி. அதுவே மக்களைப் புத்தேளிராக ஆக்கும்நெறி. அந்நெறியைக் , கைவிட்டு; மக்கள் செருக்குற்றுப் பிணங்கிப் போரெனும் சூழலில் சிக்கி, அவலப் பெருங் கடலுளாழ்ந்து, அக்கடலை நீந்திக் கரைகாணமாட்டாது மக்கள் துன்புற்றுத் துடிக்கின்றனர். போரிதெனக்கண்டு, அதனை அறவே நீக்கி வாழல் வேண்டுமென விரும்பினும், மக்கள் சமயநெறியில் நில்லாமையால், மீண்டும் போர் மக்களிடைப் புகுந்து மக்கள் வாழ்வினைப் பாழ்படுத்துமெனக் கருத இடமுளது. மக்கள் யாண்டும் பசியாலும், பிணியாலும் வாடுகின்றனர். அவர்கள் உள்ளத்தில் சிறிதேனும் அமைதியிலை. உடலில் வலிமை யில்லை. பாகிஸ்தானத்தில் வாழும் இந்துக்கள், வீடு, வாயில், பொருள் முதலியவற்றைப் பறிகொடுத்து, வேற்று நாடுநோக்கி உயிர்தப்பிவாழ ஓடுகின்றனர். அவர் செல்லும் நாட்டிலும் வறுமையும் பசியும் அவர்க்கு முன்னே புகுந்து குடிகொண்டுளது. உலகத்தில் எப்பகுதியும், மக்கள் அமைதியுடன் வாழும் இடமாகவில்லை உலகம் துன்பத்தினீங்கி இன்புற்று வாழவேண்டுமானால், மக்கள் சமயத் துறையில் நிற்கவேண்டும். மக்கள் கடவுட்பற்றுடையாராயின், எல்லாரும் இன்புற்றிருக்க விரும்பி ஒழுகுவார் தாம் தாமே தனித்தனி இன்புற்றுவாழ விரும்புவோர் கடவுட்பற்றில்லாதவராவர். அவர், பிறர் துன்புற்றிருக்கத் தாம்மட்டும் இன்புற்றிருக்க வாழ விரும்புவோ ராவர். பிறர் எல்லாம் துன்புறவும், தாம்மட்டும் இன்புற்று வாழ்தல் படியாது. கடவுட்பற்றே குறிக்கோளாக வாழ்தல்தான் இற்றைநாள் மக்களிடைக் காணப்படும் துன்பங்களைப் போக்கும் நெறி. முதலாளிகள், தொழிலாளர், நிலக்கிழவர், உழவர், வெள்ளையர், கருப்பர், பாக்கிஸ்தானத்தார், இந்தியர், அமெரிக்கர் யூதர் என்றின்னோரன்ன பல் பிரிவினராக மக்கள் பிரிந்து, ஒருவரையொருவர் பகைத்துச்சீற்றங்கொண்டுழல்வாதன செய்து துன்புறுவதன் காரணம் யாது. இறைவன் திருவடிக் கன்பின்மையே. பகைகொண்டு பிணங்கும் உயிர்கள், பகைமையை மறந்து, நேசங் கொள்வதற்குரிய வழி, கடவுட்பற்றுடைய சமய நெறியே யன்றிப் பிறிதில்லை

'நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்ற
நயத்தலினால்
மலிவாய வெள்ளெயிற்றரவும் மயின்மீது
மருண்டுவிழும்
சலியாத நிலையரியும் தடங்கரியுமுடன்
சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய
புல்வாயும்'
—பெரியபுராணம் ஆனாயநாயனார்

மக்கள் அறிவிலும், ஆற்றலிலும், வாழ்க்கை நெறியிலும், உருவிலும் பல்வேறு வகையினரா யுள்ளார். உண்ணவும், உடுக்கவும்கூடத் தெரியாத, மலைவாணராகிய பழைஞர் முதல் புத்தேளிரெனத் தகும் திருவள்ளுவர் அனையார் ஈறாக மக்கள் பல்வேறு தகுதிப்பா டுடையராக உளர். அத்துணை வேறுபாடுடைய மக்கள் எல்லாரும் வாழ்வதை நோக்குக. அவரனைவரும் வாழ்கிறார்களா? பலர் வாழ்வாரல்லர். சிலரே வாழ்வார், உண்டுடுத்துத் திரிவாரெல்லாம். வாழ்வாராவரோ? அவருட் பலர் உழல்வார். வாழ்க்கை அறிஞர்க்கு ஒரு ஓவியம், அஃதவர்க்கு ஒரு இசையமுதம், அங்ஙனமாகக் கொண்டுவாழும் மக்கள் எத்துணையோர்? அழகும் இன்பமும் இரு வேறு வகைப் பொருள்கள் அல்ல; ஓரே பொருளில் இருதன்மை நோக்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# விக்கிரகம் அவசியமா?

[ சிவராமகிருஷ்ணன், மதுரை ]

கற்பனை உலகில் நாம் நடமாடிக் கொண்டிருக்கிறோம். கற்பனையே சிறந்தபலாபலன் அளித்துக்கொண்டு வருகிறது. கற்பனையின் நாட்டம் நல்வழியில் செல்லுமாயின் நமக்கு இனிதாய் முடியும் என்பது கண்கூடு. மற்று தீயகற்பனையாயிருப்பின் பாதி பாழுங்கிணற்றில் பாதம் வைத்தாற் போலாகும். ஆகக்கூடி கற்பனையும் உன்னத ஸ்தானம் வகிக்கிறது நல்லெண்ணம், நல்லாராய்ச்சியே கற்பனைக்குச் சிகரம். அச்சிகரத்தை அணுக மனம், வாக்கு, காயம் என்பவைகள் தூய்மையாயிருக்கவேண்டும். இவ்வாறு திரிகரணங்கள் பரிசுத்தமடைய நல்லவர்சங்கம் அதாவது சற்சன சங்கம், நல்லொழுக்கம், பெண்மணிகளைத் தம் தாயாகவோ, அன்றி சகோதரியாகவோ கொள்ளும் மனப்பான்மை போன்ற சன்மார்க்கங்களைக் கடைப்பிடித்தொழுகவேண்டும். இவ்வளவு கற்பனைக்கும் ஒரு மூலாதாரம் வேண்டுமே விதையன்றி மரமில்லை; மரமின்றி விதையில்லை—என்பதில் எது தான் முதல் மூலாதாரம எனக் கூற வழக்கறிஞர்கள் பலர் முயன்றும் கறபனைக் கெட்டவில்லை. ஆகவே உலகம் ஒரு பொருளை நபி பிறிதொரு பொருள் இருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை,

கற்பனைக் கெட்டாத பரம்பொருளொன்றையே விக்கிரகம் என்னும் கற்பனை வடிவம் தெளியவைக்கிறது என்பதுதான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரின் முடிவான கருத்தாகும் என்ப. சாதாரணமான ஓர் உருவச் சிலையின் முன்நின்று உற்றுநோக்குமிடத்து அதை சிலையென்றேமறந்து, கலையையும் மறந்து அதன்கண் விசேஷமாக நம் மனம் கவரப்படுகிறதென்பது வெள்ளிடைமலை. இதினின்றும் சிலை ஓர் உருவ உணர்ச்சியை அளிக்கிறதென்பதை அறிகிறோம். இங்ஙனமேதான், கடவுள் உருவத்திலிருக்கும் விக்கிரகமும், புத்துணர்ச்சிகளை புகுத்துகிறது. வீடுகட்டு முன் 'பிளான்' என்பது எவ்வளவு அவசியமோ அதேமாதிரி கடவுளை அடையுமுன விக்கிரகத்தை வணங்குவது அவசியமாகிறது. மூலகாரணமாகிய விக்கிரகம் இதுவரைக்கும் இருந்திருக்காவிடில் கடவுள், தெய்வம் என்ற வார்த்தைகளையே புதியதாக நினைக்க நேர்ந்திருக்கும் அதே க்ஷணத்தில் அதர்மம ஓங்கி தர்மம் குலைந்து பிரளயகாலம கடிதில் தொடர்ந்திருக்கும். அவ்வளவு முக்கியத்திற்கு காரணம்தான் என்னவென்று ஆராயவேண்டும். ஆராய்ச்சி கடிதெனினும் மூலப்பொருளை அறியு அவாவில் நாம் சளைக்கவேண்டியதில்லை பாருங்கள்! தற்காலத்தில் விக்கிரகம இருந்தும்கூட அதன் உண்மைப்பொருளை உணராது தனக்கு மிஞ்சியவன் தரணியில் எவனும் உளனோ! என இறுமாந்து நீதிநெறி வழுவி வாளா யிருக்கின்றனர் பலர், இவர்கள்

அகந்தை அழிக்கும், ஆத்திரம்
பழிக்கும், திடமுடன்
அறிந்தவன் சேவடி போற்றிடில்
இடர்க்கடல் நீந்திடுவாய்.

என்றும் உயரிய உண்மையை உணரார்போலும்! உண்மையில்இவர்களுக்கு விக்கிரகத்தின் மூலம் ஆத்ம தரிசனம் நல்குமாயின், இவ்வாறு தம் வாணாட்களை வீணாட்களாக்கிக் கொள்ளமாட்டார்கள் என்பது திண்ணம்.

விக்கிரகம் அரியதொரு ஆத்மசக்தியை அளிக்கவல்லது. இதன்மாட்டு ஒளிரும் குறியும், முகவதனமும், இகவாழ்வில் கடவுளின ஆற்றலையும், அரிய செயலையும் அறிந்துகொள்ள ஹேதுவாகின்றன. அறிவிலிகளின் அஞ்ஞானத்தை அகற்றவே விக்கிரகம முதன்மை ஸ்தானமாகக் கருதப்படுகிறது. மெய்யாக ஒருவன் தன் நிஜ பயபக்தியை அல்லது அன்பைத் தனது இஷ்டதேவனைக் குறிக்கும் கற்சிலையினிடம்-விக்கிரகத்தினிடம்-செலுத்தினால் என்றுமறியாத ஒருவித புளகாங்கித உணர்ச்சி அவனுடைய இருதய கமலத்தில் புகுகின்றது. அவ்வுருவம் இருதயகமலத்தில் வாசஞ்செய்யஆரம்பிக்கிறது. அப்பொழுதுதான் யோகநிஷ்டைப் பலன் கிடைக்கிறது. நிஷ்டையில் அவ்வுருவத்தைத்தவிர்த்துஎந்தவடிவமும்தெரிவதில்லை. இதன் காரணம் விக்கிரகத்தின் தூய்மையே. அதனிடம் சோபையும், காந்தியும்போங்கிவழிகிறது. வீரமும், தீரமும் திகழ்கிறது, ஏந்தியிருக்கும ஆயுதங்கள், பூண்டிருக்கும கோலங்கள், மற்றும் ரூபலாவண்யங்கள் ஆண்மையின் சின்னங்களைச் சுட்டிக் காண்பிக்கிறது

இத்தனையும் ஒருங்கே சேர்த்து விக்கிரகம் என்று ஒன்றைச் செய்தார்கள். ஒவ்வொரு பாகமும், ஒவ்வொரு கருத்தும் தத்துவமும் உடையனவாயிருக்கக் காணலாம். வெறும் கோமாளித்தனமாகவும், கேலிக்கூத்தாகவும் உருவாக்கப்படவில்லை. கலையில் தேர்ந்த சிற்பிகள்—தெய்விக சக்தி வாய்க்கப்பெற்றவர்கள்தான் இத் திருக்கைங்கரியத்தை இனிது செய்து முடித்திருக்கின்றனர், கடவுளைக் கண்டவர்கள், கண்ட பலர் சொல்லக்கேட்டவர்கள்தான் இவ்விதமாக செய்திருக்க, "அவர்களுக்கு நம் வணக்க உரித்தாகுக' என்று சொல்லுவது மிகையாகாது. கல்தானே என்று சொல்வது அறியாமை; படித்துப்பட்டம்பெற்ற பலரும் மேற்கண்டவாறு சொல்வது அறியாமையிலும் அறியாமை நிச்சயமாக அவர்கள் மூளையில் கருமை என்னும் மாயை மறைந்திருக்கிறதென்றே எண்ணவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களைக் குறை கூறுவது நலமல்ல; மூளையைச் சீர்படுத்த முனைய வேண்டுவதே ஞானியோர் கடமை.

விக்கிரகம தெய்வீகசக்தியின் பண்புகளை உணர்த்துவதற்கு சிருஷ்டிக்கப்பட்டதே யொழிய பொம்மை விளையாட்டுக்காக அல்ல. பொம்மை

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், 'சர்வசித்துஸ்ரீ மார்கழி உ௨ க செவ்வாய்க்கிழமை

## பசுப்பாற் பஞ்சம்

II

அக்காலத்தில் மநுநீதிகண்ட சோழமகாராசனுடைய புதல்வன் தேர் செலுத்திக்கொண்டு போனபோது, ஒரு ஆன்கன்று துள்ளியோடுஞ்சமயத்துத் தேர்க்காலில் அகப்பட்டு மாண்டுவிட அந்த இராசகுமாரன் அடைந்த துயரமும், அவன் பிதாவாகிய சோழமகாராசன் செய்யத் துணிந்த செயற்கருஞ் செயலும் இங்குள்ள சைவமக்கள் அறியாதனவல்ல; பணத்துக் காசைப்பட்டு தாங்கள் பிள்ளைபோற் பேணி வளர்த்த ஆனினங்களை சிவசின்னமாகிய விபூதியையும் பஞ்ச கவ்வியத்தையும் தரும் பசுக்களை, அரி பிரமேந்திராதி தேவர்கள் வசித்தற்குரிய அங்கங்களைக் கொண்ட கோக்களை, உண்மையான சைவ நன்மக்கள் எவரும் பூசிக்கும் ஆக்களைக் கொலைசெய்யும் பொருட்டு விற்குஞ் சைவசமயத்தவர்கள் யாருமிருந்தால், அவர்களுஞ் சைவர்களாவார்களா அப்படிப்பட்ட பாதகர்கள்தாம் பஞ்சமா பாதகரெனப்படுவர்! பசு மேய்ப்போனொருன், ஒரு பசுவிற்குக் கோல்கொண்டு அடித்தபோது அதனைக்கண்ட சண்டேசுர நாயனர் பட்டபாட்டையும் செய்த செயலையும், தங்கள் மேய்ப்பனையிழந்து பசுக்கள் பட்ட துயரத்தைக் கண்டு திருமூல நாயனர் செய்த செயலையும் இறைச்சியின்பொருட்டுப் பசுக்களை விற்கும் பாவிகள் அறியார்களா? மற்றை மார்க்கத்தினர் செய்வதைச் சைவரென்றிருக்கும் இந்தச் சிலர் பின்பற்றலாகுமா?

இப்படியான அக்கிரமம் நடக்கும்போது இந்த நாட்டிலே குழந்தைக்குப் பால் கிடைக்குமா? குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும்பசு தாய்க்குச் சரியல்லவா? கோவதை செய்வோர்க்கும், செய்வோர்க்குத் துணை புரிவோர்க்கும் எவ்வகையான பிராயச்சித்தமு மில்லையாமே! இப்படியான அக்கிரமம் நடக்கும் நாட்டிலே கால மழை பெய்யுமா? பஞ்சம் நேராமல் விடுமா? தொற்று நோய்கள் பற்ருமற் போகுமா? மன்னவன் கோல் செங்கோலாகுமா? இவைகளையெல்லாம்நினைக்க மனம்நடுங்குகின்றது; சரீரம் பதறுகின்றது.

கோவதையாகிய இந்த அக்கிரமத்தை மேலும் மேலும் முற்றவிட்டால், இந்த இலங்கை நாடு ஈடேறப்போவதில்லை; இலங்கையிலேயுள்ள பிரதான சமயம் இரண்டு; இங்குள்ள ஏனைய சமயத்தவர்கள் தொகையிற் குறைந்தவர்கள்; ஆனல் அச் சமயத்தவர்களும் கோவதைக்கு உடன்படுவார்களென நாம் எண்ணவொண்ணது; இங்ஙன மிருத்தலாற் கொல்லாமையென்னுஞ் சீலம்பூண்ட பௌத்த சமயத்தைச்சேர்ந்த திரு. சேனநாயக அவர்களின் பரிபாலனத்திலே இக்கோவதையை அறவே தடுக்கும் பிரமாண மொன்று ஏற்படுமானல், அது இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் புண்ணியத்தையும் புகழையும் தருவதாகும். நாடெங்கும் நன்கு வாழும்; "நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை" என்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர்.

இது இவ்வாறுக, எங்கள் யாழ்ப்பாணப் பட்டினத்திலே இப்பொழுதுள்ள பசுப்பாற் பஞ்சம் பரிதாபப்படத்தக்கது. இப்பட்டின சங்கத்தார் பட்டின வாசிகள் பசுக்காத்துப் போதிய பாலைப்பெற்றுத் தங்கள் குழந்தைகளுக்கு ஊட்டவும் தாங்கள் அதனைப் பலவகையில் உபயோகித்தற்குமாகிய ஒழுங்குகளெதனையுஞ் செய்திலர்: யாழ்ப்பாணப் பட்டினத்திலேனும், அயலிலேனும் பசுக்கள்மேயக்கூடிய ஒரு தக்க பசும்புற்றறை யில்லை; பசுக்களை வேண்டிய வேண்டிய காலத்திற் சினைப்படுத்தற்காகிய ஆனேறுகள் பட்டின சங்கத்தார் பொறுப்பிலில்லை; யாரும் பசு வளர்ப்பவர்கள் தாம்வளர்க்கும் பசுக்களைச் சினைப்படுத்த வேண்டுமானல், ஊரில் இரண்டொருவர் வைத்திருக்கும் ஆண்மையற்ற மெலிந்த ஆனேறுகள் நிற்குமிடத்திற்குக் கோக்களைக் கொண்டுபோய் மூன்று ரூபாவுக்குமேற்பட, அந்த ஆனேறுகளை வளர்ப்போர்க்குக் கொடுத்து ஆவிடச் செய்தாலும், அதனுற் பசுக்கள் சினைப்படுதலரிதாகும்; திருநெல்வேலியி லுள்ள அரசினர் முன்மாதிரித் தோட்டத்திற் பசுக்களைக் கொண்டுபோய் விடுத்துச் சினைப்படுத்தலாமோ வெனின், அங்கு உள்ள அதிகாரிகள் குறித்த நேரத்திற்கு ஆக்களை விடமுடியுமே யல்லாமல், ஆக்கள் விரும்பிய நேரத்திற் கோவேறுகளை விடுதல் முடியாதாகும்; இப்படியானுற் பசுக்கள் சினைப்படுவதெப்படி? இனி, பட்டினத்திற் கயலூர்களிலிருந்து வரும் விலைப்பாலை வாங்கிக் குழந்தைகளுக்கும் ஊட்டித் தாமும் உபயோடிக்கலாமே என்றுல், அந்தப் பாலில் நூற்றுக்கு எழுபது எண்பது விகிதம் தண்ணீர் கலந்து விற்றலினல், இப்பட்டினத்திலே விற்கப்படும் விலைப்பால் முழுவதும் பாலுடன் கலந்த நீராகி, சிவத்தோடு இரண்டறக் கலந்த மாணிக்கவாசக சுவாமிகளின் நிலையை யடைந்து விடுகின்றது. இப்பட்டினத்தின்பசுப்பால்நிலை இப்படி யிருத்தலினல், எங்கள் பட்டினப் பிதாக்கள் பால் விஷயமாகச் செய்யும் சீர்திருத்தத்தைத் தங்கள் பிரதானமான கடனென நினைத்து, நாம்மேலே எடுத்துக்காட்டிய சில ஒழுங்குகளை உடனே செய்வரேற் பட்டினவாசிகட்கு நன்மை யுண்டாம்; இல்லையேற் பெருந் தொகையான பணம் அந்நிய நாட்டிலிருந்து இங்கு இறக்குமதிசெய்யப்படும் பலவகையான பாலாகாரங்களின் பொருட்டு நாள்தோறும் அநியாயமாக வெளியேறு மென்பது நிசம்.

கடிதம்

# இலங்கையில் இந்தியர்

ஐயா,

தங்களின் 25–11-47ல் வெளிவந்த பத்திரிகையில், இலங்கையை பிரிட்டிஷார் சுரண்டியதுபோல இந்தியர் சுரண்டவில்லை யென்று திரு. இராமலிங்கம் அவர்கள் விவேகானந்தர் மண்டபத்தில் கூறியதை வாசித்து எந்த நன்றியறிதலுடைய இலங்கையனும் மௌனமாக யிருக்கமாட்டான். இலங்கையருக்கு எத்தன்மையான மனஸ்தாபமும் பொருமையும் இந்தியரில் இல்லையெனக் கூசாமல் கூறலாமெனினும் அப்பெரியார் கூறியது சரியானதாவென்று அறிவது எம்மெல்லோரின் கடமையாகும்,

1815 ம் ஆண்டுக்கு முன் இலங்கையர் ஓயாது போர்புரிந்து நொடித்திருக்கும்பொழுது ஒல்லாந்தரும் போத்துக்கீசரும் இலங்கையைக் கைப்பற்றி, ஆலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கி, சமயவிதிப்படி நடப்பவர்களைத் தண்டித்து அசுரர்கள் தேவர்களை வருத்தியவாறு வருத்தி வந்தனர். அசுரர்களின் இடுக்கண்களைப் பொறுக்கமுடியாத தேவர்கள் பரம்பொருளுக்கு முறையிட்டு ஓலமிட அதைக சகிக்கமுடியாமல் கந்தக்கடவுளாகத் தோன்றி அவர்களின் கவலையை நீக்கி வைத்தது போல இலங்கையரும் அவர்களின் கொடுமைகளைச் சகிக்கமுடியாமல் ஓலமிடுவதை அறிந்து கருணையங்கடலாகிய சிவபெருமான் ஆங்கிலேயரை இங்கு அனுப்பி வைத்தார்.

இலங்கை இன்றிருக்கும் நிலையில் 1815-ம ஆண்டில் இருந்ததா? அப்படியானுல் ஆங்கிலேயர் எங்கள் பணத்தைச் சுரண்டிக் கொண்டு போனர்களென்று கூறலாம் ஆனல் இலங்கை இன்று பார்ப்போரின் மனதைப் பகட்டிக்கொண்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் தேசத்தின் பணத்தைத் தேசத்தின் நன்மைக்குச் செலவழித்தார்களென்று காட்டுகின்றன ஒருவன் செய்த வேலைக்குக் கூலி கொடுக்கவேண்டுமல்லவா? அவ்வாறு ஆங்கிலேயர் செய்த நன்மைக்கும், திருத்தத்துக்கும, ஜீவகாருண்யத்திற்கும் எச்செய்கையாலும் எத்தொகையாலும் நன்றியறிதலைக்காட்ட முடியாத நிலைமையில் இருக்கின்றேம். கூறியதில் ஏதாவதொன்றை அல்லது வேறு எவ்விதமான அறிகுறிகளை இந்தியர் செய்திருக்கின்றர்களா? இல்லையே! இவ்வாறிருக்க ஆங்கிலேயர் போன்று இந்தியர் இலங்கையைச் சுரண்டவில்லை யென்பது ஏற்கமுடியாது. ஆங்கிலேயர் இந்தியரை இலங்கைக்கு வரவழைத்து உன்னத நிலையில் வைத்தபடியால் அவர்களின் கருணையை மறந்து இன்று தூஷிக்கின்றனர். இத்தன்மையான இந்தியர் கஷ்டப்பட்டு காத்துவந்த இலங்கையரைத் தூஷிக்காமல் விடுவார்களென்று நம்புவதற்கு இடமில்லை.

12-12-47ல் வெளிவந்த இதழில் திரு. க பொ. தில்லையம்பலமவர்கள் "யாழ்ப்பாணம் முழுவதிலும அநேக பிறவூர் மின்சார வேலையாட்களையும் கம்மாளர், தச்சர், கார் சாரதிகளையும் இன்னும் அத்தகையவர்களையும் காணலாமென்றும்; யாழ்ப்பாணம் முழுவதிலும் ஒரு உள்ளூர் தமிழ்த் தையற்காரர் இருப்பாரா வென்று தான் நினைக்கவில்லையென்றும், பிறநாட்டார் இவ்வூர் வியாபாரங்களைக் கைப்பற்றிவிட்டார்கள். நாங்கள் ஏமாந்திருந்துவிட்டு எங்களைச் சுரண்டிக்கொண்டுபோகிறர்களென்று கூறுகிறேமென்று" வரைந்துள்ளார். இப்பெரியார் பலதையும் நன்கு ஆராய்ந்தே அவ்வாறு எழுதியிருக்கின்றர். இது உண்மையாயின் இந்தியர் இலங்கையரை எத்தொழிலையும் செய்யவிடாமல் தேசத்தின் பணத்தைச் சுரண்டிக்கொண்டேகுவது உண்மையாகும். வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் பசியினுலும் தங்கள் கவலையைக் கூறும்பொழுது அதைப் பெரிதாக எடுத்து இலங்கையரில் குறைகூறுவது தகுதியாகாது.

இந்தியரைத் தொன்றுதொட்டு ஓர் மாதாவின் பாலர் போன்று அன்பு பாராட்டி எவ்விதமான கஷ்டமும் துன்பமும் கொடுக்காமல் இலங்கையர் காப்பாற்றி வந்தனர் ஆனல் இந்தியரை இந்தியர் வேற்றுமைப்படுத்தி அன்பின்றி இந்தி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# சேனநாயக்கா திருப்தி

## இந்திய-இலங்கைச் சமரசத்தில்

"இலங்கைப் பிரதமர் மிஸ்ரர் டி. எஸ். சேனநாயக்காவும் பரிவாரங்களும் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு மீண்டு விட்டனர் இலங்கைக்கு வரும் வழியில் அவர் சென்னையில நின்றபோது இலங்கை-இந்திய உறவு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் மங்களகரமான முடிவெய்தியதைப்பற்றித் திருப்தி தெரிவித்து ஓர் பத்திரிகை நிருபரிடம் பின்வருமாறு கூறினர்.

இந்தியப் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால்நேரு என்னை மிகவும் அன்பாக உபசரித்தார். அதுபோலவே பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் மகமதலி ஜின்னவும் என்னை வரவேற்று உபசரித்தார். இந்திய - இலங்கைப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதில தம்மால் ஆன உதவியைச் செய்வதாக ஜனப் ஜின்ன எனக்கு உறுதி கூறினர்;

"இலங்கையிலும் இந்தியரின் பிரஜாவுரிமை சம்பந்தமான பிரச்சினையைப் பற்றி, இலங்கையும் இந்தியாவும் இப்போது ஓர் முடிவுக்கு வந்துவிட்டன. இனி இந்த முடிவைக் கிரியையில் நடத்துவதுதான் பாக்கி. இந்தியர் பிரஜாவுரிமை பெறவேண்டுமானல் எத்தகைய இலக்கணங்களுடன் இருக்கவேண்டுமென்பது பற்றிச் செய்யப்பட்ட முடிவுகளை இப்போது வெளியிட நான் தயாராக இல்லை. இப்போது அதனை வெளியிடுவது அபாயகரமானது" என்று கருதுகிறேன். இலங்கையைத் தமது தாயகமாகக் கொள்ள விரும்பும், தகுதிவாய்ந்த இந்தியர்களுக்கு இலங்கையிற் பிரஜாவுரிமை நாம் கொடுக்கவேண்டும். இந்த இந்தியர்களுக்கு இந்தியாவிற் பிரஜாவுரிமை இருந்தால், அது இந்திய அரசாங்கத்தால் நீக்கப்படும்; இரண்டு தேசங்களிலும் அவர்கள் பிரசைகளாக இருக்கமுடியாது. ஒன்றில் அவர்கள் இந்தியராக இருக்கவேண்டும், அல்லது இலங்கையராக இருக்கவேண்டும்.

"குடியேற்ற விஷயமாகக் கட்டுப்படுத்தும சட்டம் கூடிய சீக்கிரத்தில் இரண்டுதேச அரசாங்கங்களாலும் இயற்றப்படும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிச் செய்வது என்ன?

## பிரதிநிதிகளுக்கு ஓர் வார்த்தை

( .... ஸ்ரீதரன் ... )

I

இன்று தமிழ்மக்களுடைய நிலைமை என்ன? இவர்கள் இலங்கையரசியல் விஷயமாக இனி ஆற்றவேண்டியது யாது? என்னும் இன்னோரன்ன கேள்விகள் இப்போது எழுகின்றன. பாராளுமன்றம் என்பது பொதுஜனங்களின் க்ஷேமத்தின் பொருட்டு ஏற்பட்ட ஓர் ஸ்தாபனம், அந்தஸ்தாபனத்திலே பங்குபற்றி, பொது மக்களுக்கு வேண்டிய நன்மை செய்வதன் பொருட்டுத்தான் ஜனப்பிரதிநிதிகள் தெரிவுசெய்யப் பெற்றிருக்கின்றனர். ஆனால், எம் தமிழ்ப் பிரதிநிதிகள், பொதுஜன நன்மைக்கான எவ்விஷயமாவது செய்யக்கூடிய நிலைமையில இன்று இருக்கின்றனரா? இல்லவேயில்லை என்பது, சமீபகாலத்தில் நிகழ்ந்த வரவுசெலவுத் திட்ட விவாதத்தினால் தெரியவரும். எமது தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகளும், இடதுசாரிக்கட்சியினரும், எவ்வளவோ நன்மைதரக்கூடிய திருத்தங்களை இந்த வரவு செலவுத் திட்டத்தில் பிரேரித்தனர். அவற்றில் ஒன்றுவதை இன்று அதிகாரம் படைத்துள்ள அரசாங்கம் ஏற்றதா? ஜனநாயகம் என்ற பெயரால், தம் பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு சேனநாயக்காக்கோஷ்டி, சென்ற 16 ஆண்டுகாலமாக, எத்தகையகருமம்ஆற்றியதோ, அத்தகைய கருமத்தை ஆற்ற இப்போதும் முனைந்துவிட்டது என்றே கூறவேண்டியிருக்கிறது. உண்மையைக் கூறுங்கால் இங்கே இந்த இலங்கையில் ஜனநாயகம் நிலவவில்லை. ஓர் கட்சியின் சர்வாதிகாரத் தர்பார்தான் நடந்துவருகிறது என்பதை எவரும் ஒத்துக்கொள்ளவே வேண்டும். இன்று நாம் சுதந்திரம் ஓரளவுக்குப் பெற்றிருக்கிறோம் இந்தச் சுதந்திரத்தினால் நாம் ஏதும் பயன் அடைந்திருக்கிறோமா? அந்தக் காலத்திலே ஆங்கிலரின் சர்வாதிகாரம் நடந்தகாலத்திலே—குடியேற்ற நாட்டு மந்திரியால் நியமிக்கப்பட்ட வெள்ளைக்கார உத்தியோகத்தரும், தேசாதிபதியும் தேச நிருவாகத்தை நடத்தினர்; இன்று அவர்களுக்குப் பதிலாக, 14 மந்திரிமாரும், அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதே லட்சியமாகக் கொண்ட 10 உதவி மந்திரிமாரும் தேசபரிபாலனம் செய்து வருகின்றனர். முன்பு வெள்ளைக்கார உத்தியோகத்தர் பெற்றுவந்த கொழுத்த வேதனத்தை இன்று இலங்கையிலேஉள்ள ஓர்சில செல்வர் மந்திரிமாராகப் பெற்று வருகின்றனர். சுருங்கச் சொல்லுங்கால் வெள்ளைத்துரைமார் ஆட்சிக்குப் பதிலாக கறுத்தத்துரைமாரின் ஆட்சி இச்சுதந்திரத்தால் ஏற்பட்டதேயொழிய, பொதுஜனங்களால், பொதுஜனங்களுக்கான, பொதுஜனங்களின பரிபாலனம், இச்சுதந்திரத்தால், நடைபெறவில்லை. ஆகவே, இலங்கைவாழ பொதுமக்கள் உண்மையான சுதந்திரத்தை அடையவேயில்லை. இச்சுதந்திரத்தால் இலங்கையில் எந்தவிதமான மாற்றமும் நிகழவில்லை. முந்தியிருந்த அடிமைச் சாதனங்கள் இன்றும் அப்படியே இருக்கின்றன. மாதம 500 ரூபா வேதனம்பெற்ற உத்தியோகத்தர் இன்று 5000 ரூபா பெறுகின்றனர். இதுதான ஓர் வித்தியாசம். வேறெவ்விதமான வித்தியாசமும், தேசபரிபாலனத்தில் நிகழவில்லை.

நிலைமை இப்படியேயிருக்கப் பொதுஜனங்கள் விடலாகுமா? இப்போதுள்ள நிலைமையை அவதானிக்குமளவில் இன்னும் 5 வருஷங்களுக்கு இப்போதுள்ள அரசாங்கம் நிலைத்திருக்கும் என்றே கூறவேண்டும் 5 வருஷமல்ல, இன்னும் 5 வருஷத்துக்குப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை அவர்கள் நீடித்தாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன். ஆகவே இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அடுத்த பொதுத்தேர்தலை எதிர்பார்ப்பதிற் பிரயோசனமில்லை. அடுத்த தேர்தல் வருவதற்கிடையில் விசேஷமாகத் தமிழ் மக்களும், பொதுவாக இலங்கைப்பொதுஜனங்களும் மிகவும் கஷ்டப்படப்போகிறார்கள். இந்தக் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யப் பொதுஜனங்களும், அவர்களுடைய உண்மைப் பிரதிநிதிகளும், தயார் என்று கேட்கிறேன்.

இரணைமடுத்திட்டம் அபிவிருத்திசெய்யப்படவேண்டும். பூநகரியிலே, ஓர் பெரிய குளம் அமைக்கப்படல் வேண்டும். அதன்மூலம் இரண்டுபோகம் நெல்விளைவிக்கப்படவேண்டும். வன்னிக்காடுகள் அழித்துப் பண்படுத்தப்படல் வேண்டும் வடமாகாணத்திற்கும், கிழமாகாணத்திற்கும் பொதுவாக ஓர் பெரிய நெசவுத் தொழிற்சாலை நவீன யந்திரங்களுடன் ஸ்தாபிக்கப்படுதல்வேண்டும் நிலாவரை பொக்கணை முதலாம் நீரூற்றுக்களை இங்கே பயன்படுத்தவேண்டும். சுருட்டுத் தொழிலைப் புநருத்தாரணம் செய்ய வேண்டும். ஓர் பீடித்தொழிற்சாலை இங்கே நிறுவவேண்டும். இன்னும் மக்களுக்கு வேண்டிய பொருள்களுக்கான தொழிற்சாலைகள் ஆங்காங்கே நிறுவப்படல்வேண்டும். ஊர்கடோறும் வித்தியாசாலைகள் நிறுவப்படல் வேண்டும். செல்வருக்கு—அதாவது வருமானவரி கொடுப்போர்களின்பிள்ளைகளுக்குவேதனம் கல்வியும், மற்றவர்களுக்கு இலவசக் கல்வியும் ஊட்டப்படுதல் வேண்டும். இலவசக் கல்வி மாத்திரமன்றி, இலவசப் புத்தகங்கள் உபகரணங்கள், மத்தியானப் போசனம்—புஷ்டியான ருசியான போசனம்- என்பன உதவப்படல் வேண்டும். 55 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆடவனுக்கும் பென்ஷன் கொடுக்கப்படவேண்டும் ஓர் அரசாங்க உத்தியோகத்தர் 55 வயதடைந்ததும், அவருக்குப் பெருந்தொகையான உபகாரவேதனம் அளிக்கப்படுகிறது. ஆனால் ஓர் தொழிலாளிக்கு அரசாங்கம் இவ்வித சலுகையை என் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்? ஓர் தொழிலாளி நெல்மூடையைச் சுமந்து, குதத்திற் சேர்த்தால்தான், அதற்கு ஓர் அரசாங்க லிகிதர் கணக்கு எழுதமுடியும், அத்தொழிலாளி தன் கடமையைச் செய்யாவிட்டால், குறித்த லிகிதர்க்கு வேலையில்லை. நாட்டுத் தொழிலாளிகளும், விவசாயிகளும் தத்தம் கடமையைச் சரிவரச் செய்யாவிட்டால், அரசாங்கமேது? மந்திரிமாரேது? உத்தியோகத்தரேது? அரசாங்கத்திற்குப் பணத்தை உதவுபவன் தொழிலாளி; விவசாயி: அவன் இறுக்கும் பணத்தைக்கொண்டுஓர் சிலர்க்கு அரசாங்கம்பென்ஷன் கொடுக்கிறது. ஆனால். அப்பணத்துக்கு மூலகாரணனான விவசாயியும் தொழிலாளியும் தம் முதிய வயதில் தம் தலைவிதியை நொந்து, இறைவனை நொந்து, சமூக அமைப்பை நொந்து கவலையுடன், காலம் கழிக்கவேண்டியிருக்கிறது. இது நீதியா? கடவுளுக்கு அடுக்குமா? கேவலம் ஓர் பொலிஸ் சேவகனுக்குப் பென்ஷன் கொடுக்கலாமென்றால், ஏன் ஓர் தொழிலாளிக்கு அது கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன்.

அடுத்ததாக வேலையில்லாக் காலத்தில். அல்லது நோயுற்ற காலத்தில் தொழிலாளிக்குச் சகாயப்பணம் உதவவேண்டும். ஓர் அரசாங்க உத்தியோகத்தர், லீவு பெற்றால் அவருக்கு லீவு நாட்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர் சுகவீனமாக இருந்தால், அக்காலத்துக்கு முழுவேதனமோ, அரைவேதனமோ உதவப்படுகிறது. ஆனால் ஓர் தொழிலாளி சிலநாட்களுக்கு வேலையில்லாதிருந்தால், அவனுக்கு இப்படியான சகாயத்தை ஏன் அரசாங்கம் செய்யக்கூடாது என்று கேட்கிறேன்;

இனி எல்லோனுக்குமிடையில் சமத்துவமும் சகோதரத்துவமும் மிளிரத்தக்கதாக, அரசாங்கம் ஓர் வேதனத்திட்டம் வகுக்கவேண்டும். ஓர் சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர் இருக்கிறார். அவர் புத்திரப்பேறில்லாதவர் என்றே வைத்துக் கொள்ளுவோம்-அல்லது ஒன்றிரண்டு பிள்ளைகளைப்பெற்றவர் என்றுவைத்துக் கொள்ளுவோம். அவருடைய மாத வேதனம் என்ன? 2500 ரூபா. இதனைவிட வீட்டு வாடகைப் பணம் கொடுக்கப்படுகிறது. இலவசப் போக்கு வரத்து வசதிகள் உண்டு. மற்றப்பக்கத்தில் ஓர் தொழிலாளி இருக்கிறான். அவனுக்கு அரைடசின் பிள்ளைகள் உளர். அவன் சம்பளம் தினம் ஒன்றுக்கு 2 ரூபா. சராசரியாக

தொடர்ச்சி 5-ம் பக்கம்

ஈழதேசபாஷைகள்பேச

## பாராளு மன்றத்தில் கட்டுப்பாடு

பாராளு மன்றத்தில் ஓர் அங்கத்தவர், சாதாரணமாக ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும் ஆனால் ஓர் அங்கத்தவர் சிங்களத்தில் அல்லது தமிழில் பேச விரும்பினால், அதனைத் தலைவராயுள்ளவர்க்கு அறிவித்து, அவர் அநுமதி யளித்தால், சிங்களத்தில் அல்லது தமிழிற் பேசலாம் இது ஓர் கேவலமான முறை, இதனை அகற்ற வேண்டும்; எந்த ஓர் அங்கத்தவரும் தன் தாய்ப் பாஷையில பாராளு மன்றத்திற் பேச உரிமை யிருக்க வேண்டும் என்று சென்றவாரம் கொழும்பிற் கூடிய சிங்களக் கவிஞர் கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டது.

இப்போது சிங்களமோ தமிழோ தெரியாத ஓர் சில நியாயவாதிகள் கையிலே அரசாங்கம் சிக்கி யிருக்கிறது என்றும், இந்த நியாயவாதிகளின் கும்மாளத்தை ஒழிக்கும் வரையில், சிங்களம், தமிழ் என்னும் இரு பாஷைகளும் தம் முன்னைய உந்நத நிலையை எய்தமாட்டா வென்று ஷை கூட்டத்தில் ஸ்ரீ விவாலி என்னும் பௌத்தகுரு கூறினர்.

## கைதடிவடக்கு இந்துகல்பி விருத்திச் சங்க வாசிகசாலைத் திறப்புவிழா

மேற்படி வாசிகசாலைத் திறப்புவிழா வைபவம் 1947-ம் ஆண்டு மார்கழி மாதம் 27-ந் திகதி சனிக்கிழமை மாலை 8 மணியளவில்கைதடி ஸ்ரீமான். செ. சுப்பிரமணியம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது

அவ்வமயம் பண்டிதர் திரு. செ. துரைசிங்கம் அவர்களால் "கிராமப்பொது ஸ்தாபனங்கள்" என்ற விஷயம் பற்றியும்; பேராசிரியர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களால் "சமயமும் கல்வியும்" என்ற விஷயம் பற்றியும் இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அவ்வமயம் தென்மராட்சிப் பகுதிப் பிரதிநிதி திரு. வே குமாரசுவாமி அவர்களால் 'கிராமவளர்ச்சியும் கமக்காரரும்" என்ற விஷயம் பேசப்பட்டது.

## புதுவருஷப் பட்டங்கள் சேர். ஒலிவருக்கும்

வழக்கம் போலப் புதுவருஷப் பட்டங்கள் இலங்கைப பிரமுகருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. சேர். ஒலிவர் குணத்திலகாவுக்கு கே வி. எம். ஜி. பட்டமும் இலங்கைச் சர்வ கலாசாலை உப அத்தியட்சகர் டக்ரர். ஐவர் ஜென்னிங்ஸிற்கு சேர்ப்பட்டமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன

மின்சாரப் பகுதி என்ஜீனியரா யிருந்த மேஜர் வி. எச். பிரேஸல். விவசாய மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி மிஸ்ரர். ஏ. ஜி. ரணசிங்ஹ, கப்ரின் டபிள்யூ ரீ. பிரின்ட்ஸி, கப்ரின் விஜயராஜசிங்கம் நல்லையா, மிஸ்ரர். ரீ ஏ டீ மெல் என்பவர்களுக்கும் ஓ. பீ ஈ. பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

கப்ரின் விஜயராஜசிங்கம், காலம்சென்ற யாழ்ப்பாணம் நியாயவாதி திரு. ரீ. ஆர். நல்லையாவின் புத்திரராவர். இவர் இலங்கைப் பட்டாளத்தில் ஓர் அதிகாரியாக இருக்கிறார்.

## மீசாலை வாலிபர் சங்க வருடாந்தக் கூட்டம்

1.1.48 மாலை 6மணிக்கு மீசாலைமாவடி விநாயகர் வீதியில் திரு. இ. த. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மேற்படி கூட்டம் ஆரம்பமாயது.

வருகைப்பாக்கள், பாமாலைகள், பூமாலைகள் யாவும் சாவகச்சேரிப் பிரதிநிதி ஸ்ரீ குமாரசாமி அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

தலைவர் மீசாலை வாசிகளின் குறைநிறை கூறி ஆவன செய்யும்படி வேண்டிச் சிறந்த ஓர் வரவேற்புரையையும் புதிய பிரதிநிதிக்கு வழங்கினர்.

திரு. V. S. கார்த்திகேசு J. P. U.M; திரு V. கனகசபை (நியாயதுரந்தரர்) ஆகியவர்கள் மீசாலையில் சமயபோதனை, புராணபடனம், அறிஞர்களால் நடாத்தப்பட வேண்டுமெனச் சுட்டிக் காட்டினர்;

மீசாலையில் ஓர் சந்தை, நெசவுநிலையம், கிராமப்புனருத்தாரணசங்கம், உணவு உற்பத்தியாளர் சங்கம் ஆகிய ஸ்தாபனம் நிறுவத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தீவிரம் மிக்க உறுப்பினர்களும் அத்தருணமே தெரிவு செய்யப்பட்டனர்.

—கடித.

# ஈர நெஞ்சினர் வீரம்

( வித்துவான் க. வேந்தனார் அவர்கள் பரமேசுவரக் கழகம் )

ஈரநெஞ்சே உலகை வாழ்விப்பது புதுக்கிப் படைப்பது. ஈரநெஞ்சில அன்பு அலையிடும். அறத்தோடு கலந்த ஆண்மைக்கனல் வீசும். ஈரமில்லா அன்பு தன் நலத்தில் கட்டுண்டு கிடப்பது. அது தன் தேவைகளை நிறைவிப்பதன் பொருட்டுப் பிறரைக் கொல்லும். அவர் உடைமைகளை வாரி விழுங்கும். அதன் வெளித்தோற்றத்தை - வெறிபிடித்த கொலைக்கோலத்தை - அறிவுடைய உலகம் மதியாது விரிந்த நோக்கமில்லா அன்பின் பெருக்கினாலன்றோ இன்றைய உலகம் கலக்கப்படுகின்றது அன்பென்பது குறிப்பிட்ட எல்லையுள் அடங்கிக் கிடப்பதல்ல அதன் அகலம் வானத்திலும் பெரிது. அதன் ஆக்கமே தெய்வ வாழ்வு அதன் விரிவே உலகின் விடுதலை. அந்த ஈர அன்பு சுரந்து பாயவேண்டும். அதன் ஊற்றிடம் தெய்வச் சாயலில் தோய்ந்து உலகை உய்யக்கொள்கின்ற உண்மைத் தொண்டர்களின் உள்ளம் அவர்களே ஈரநெஞ்சினர்—வீர நெஞ்சினர். மக்களை மக்கள் வெருட்டி மருட்டி பிணக்குவியலாய் உருட்டி உலகை அழிக்கின்ற 'ஆட்சி' வெறியை வீழ்த்துகின்ற உண்மை வீரர்கள். இந்த வீரர்களை உலகம் வரவேற்கின்றது.

மக்களின் உயர்ந்த எண்ணங்களின் தோற்றமே வழிபாடாக உருத்தாங்கியது. உயர்ந்த எண்ணங்கள் ஆராய்வொடு கலந்த அறிவில் நின்று தோன்றுகின்றன. பிறர் கட்டாயப்படுத்தியோ அல்லது தன் ஊற்றமில்லாத வெற்றுரைவாதத்தினாலோ, உயர்வான புதுப் புனைவுகள் தோன்றமாட்டா உள்ளத்தில் ஊடுருவிப் பாய்கின்ற உணர்வுப் பிழம்பு ஈரநெஞ்சிற் கலக்கவேண்டும். ஆராய்வின் பெறுபேற்றை அழிவுக்குப் பயன்படுத்துதல் மக்கட்பண்பாகாது. தமது வாழ்க்கையைப் பலியிட்டு உலக மக்களின் நலத்திற்காகக் கலைப்பண்புகளை—புதுப்பொறிகளை - அன்பு நெறியை, அறிவுக் களஞ்சியத்தைத் தேடித் தொகுத்து வைத்த பெரியோர்களே ஈரநெஞ்சினர் உண்மைத் துறவிகள்; துறவு என்பது, பெண்ணை வெறுத்தலன்று, மண்ணை வெறுத்தலன்று. உலகம் பொய், மாயை வாழ்க்கை என்று, மக்களை வெருட்டுதலன்று. இயற்கையை வெறுக்கும் வறட்டு வேதாந்தமும், உலகை அழிக்கும் முரட்டு வீரமும், எதற்கும் அஞ்சி ஒடுங்கும அறியாமையும், மக்களினத்தை மறைத்துவிடும் புலைப்பண்புகளாகும். தமது வாழ்க்கை நலத்தினைப் பொருட்படுத்ாது மற்றைய மக்களைத்தாம் காப்பாற்றவேண்டுமென்ற பேரன்பு படைத்தவர்களே துறவிகள். இன்றைய பாரத நாட்டின் வீரத்தலைவன் நேருவின் வாழ்வை அறிந்த எவரும் இதனை ஏற்றுக் கொள்வார்கள் ஐந்தடுக்கு மாடங்களில் வீற்றிருந்து இந்திரச் செல்வந்துய்க்கும் வாழ்வைத் துறந்தும், தம் ஆருயிர்த் தேவி கமலா நேருவை சிறைவாழ்க்கையிற் பலியிட்டும் அரும்பெறன் மகள் இந்திரா நேருவைக்கூட, சிறைபுக விடுத்தும் தாமும பல்முறை சிறைபுகுந்தும் பாரத நாட்டின் விடுதலைக்காகச் செயற்கருந் தொண்டுகள் ஆற்றினர்கள். நேருவைப் போன்ற வீரத்துறவி—கந்தை சுற்றவும் வழியின்றிக் கஞ்சிக் கலையும் மக்களைக் காப்பாற்றவந்த உண்மைத் தொண்டன். இன்றைய உலகில் ஒருவரும் இலர். இனிவரும் உலகில் பலர் தோன்றவேண்டும். தோன்றுவார்கள் என்றே அறிவுடை உலகம் எதிர்பார்க்கின்றது.

அஞ்சாமை தவழும் வீரநெஞ்சில்—ஈரநெஞ்சில், நின்றே இத்தகைய உயர்ந்த பிறர்நலப் பண்பு பொங்கிவழிகின்றது. தன் நலத்தை ஒறுக்கவே பெருந்துறவு, முன் எல்லாம் எங்கள் நாட்டில் தோன்றிச் சிறந்த அறிவு நூல்களையும், கலை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமே மெய்ச்சமயம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கம். நம் வாழ்க்கை அழகுடன் பொலிவுபெற்று, இன்பச் சுவையுடன் விளங்கவேண்டுமானல், நம் வாழ்க்கை அறத்தில் வேரூன்றி நிற்றல்வேண்டும். அறத்தில் வேரூன்றி நிற்றலால் இன்பமும் விளையும், அழகும் பிறக்கும். அறத்தான் வருவதே இன்ப மெனவும் பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவர்க்கணி யெனவும் தமிழ்மறை முழங்குவது காண்க. 'பேசுவன பணிந்த மொழி இனியனவே பேசுவார்' என்ற அடியார் சிறப்பைத் தெய்வச் சேக்கிழார் கூறுவது காண்க. அறத்தை யறியும் அறிவே அறிவெனப்படுவது. பிற அறிவுகள் சிறப்புடையன அல்ல. 'சென்ற இடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின் பாலுய்ப்பதறிவு' எனச் செந்நாப்போதார் கூறும திருவாக்கை ஓர்க.

அறம் கடவுட்பற்றில் வேரூன்றி நின்றாலன்றி நிலைத்து நில்லாது. ஆதலால்தான கடவுட் பற்றில்லாச் சமயங்கள், அறத்தை வலியுறுத்திக் கூறினும் அவற்றைப் பின்பற்றும் மக்கள் அறத்தில் உறைந்து நில்லாராயுள்ளார். அறத்தில் நின்றாலே யமையும், அதுவே வீடு பேற்றை யளிக்கும். இறைவன்பால் அன்பு வேண்டுவதொன்றன்று எனப் பலர் கருதுகின்றனர். இன்ப உருவினனும், இன்பகாரணனுமுள்ள இறைவன்பால் என்றும் அபார அன்பில்லையேல், அறச்செயல் மட்டும் ஒருவர்க்கு வீடு பேற்றைத் தராது. பிறப் பிறப்பிற்குக் காரணமாகவே அஃதமையும். மக்களாய்ப் பிறந்தநாம், வாழ்க்கையில் அழகுபிறக்க வாழவேண்டும். வாழ்க்கை நெறியைத் தமிழர்கள் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே நன்றாக அறிந்திருந்தனர். அந்நெறி யறிந்த புலவர்கள் நூல்கள் செய்தனர். அந்நெறியின்று ஒழுகியும் வழிகாட்டினர். 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலையென ஆன்றோர் கூறும் திருவாக்கினால், திருவள்ளுவர் காலத்துக்கு மிக முற்பட்டும் தமிழில் அறநூல்களிருந்தமை வெளியாகின்றது. அறமும் சமயமும் ஒருங்கே திருவள்ளுவர் நூலில் காணலாகும். அவர் சமயக்கணக்கர் மதி வழிபுகாது, மக்கள் சமயத்தில் நின்றுவாழும் வகையை வகுத்தருளி யுள்ளார். சமய நலன்களனைத்தையும் பெறுதற்கு, ஒருவன் தன் மனைவி மக்களைத் துறக்கவேண்டுமென்பதில்லை. இல்லறமும் துறவறமும் வீடடைவிக்கும் நெறிகளே. இறைவன்றிருவருள் நெறிநின்று, யானெனது என்னும்செருக்கற்று, இறைவன்றிருவடிக்கண் அன்பு வைப்போரே முற்றத்துறப்பார், ஏனையோர் அன்னரல்லர். 'யானெனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த உலகம் புகும்' என்றும், 'தலைப்பட்டார் தீரத்துறந்தார்' என்றும் திருவள்ளுவர் கூறுவதால், இறைவன் திருவடியைத் தலைப்பட்டாரே தீரத் துறந்தாராவரென விளக்கி யுள்ளமை காண்க. பொருள்களின் பற்றைவிட்டார், இறைவன்றிருவடிக்கண் பிலரேல், மீண்டும் பற்றுடையாராக மாறினும் மாறுவர்.

மக்கள் வரலாற்று நூலுணர்ந்தோர், சரித்திர காலத்துக்கு மிக மிக முற்பட்டே, மக்கள் வாழ்க்கையில் சமயம் கலந்துளது என்பர். எனினும் சமயம் ஒரேநிலையுடையதாய் உலகெங்கணும் இல்லை. பல்வேறு பிரிவினையுடைய மக்கட்கூட்டத்தில், பலவேறு நிலையுடைய சமயங்கள் காணப்படுகின்றன. கடவுட் பற்றுடைய சமயங்கள் உள; கடவுட் பற்றில்லாச் சமயங்களும் உள. கடவுட் பற்றுடைய சமயங்களும், கடவுள் இலக்கணங் கூறுவதில், வேற்றுமையுடையன. மக்கள் ஒழுகலாறும், அவரவர் மேற்கொண்டுள்ள சமய நெறிக்குத் தக்காங்கு வேற்றுமையுடையது. அவரவர் உள்ளப்பாங்கும் அவ்வண்ணமே வேறுபடுகின்றது. உலகில்வாழும் எல்லா மக்களும், ஒரே குடும்பத்தினர்போல், அன்புற்றுத் தழுவி, இன்புற்று வாழ்வதற்கு எதுவாய் எச்சமயமிருக்குமோ அச்சமயமே உலகப் பெரும் சமயம் எனலாம். (வரும்.)

## விக்கிரகம் அவசியமா?

முதலாம் பக்கத் தொடர்ச்சி

விளையாட்டிலும் சில உண்மைகள் பொதிந்துகிடக்கக் காணலாம். பசுங் குழந்தைகள் எதையும் திரிசனமாய்க் காணவேண்டுமென்று ஆசைப்படுவார்கள். உருவத்தை விவரித்தால் அவைகளுக்கு ஒரு உண்மையும் தோன்றாது. ஓர் பொம்மையைக் கொடுத்து அதன் முழு விவரத்தையும் சிறிது சிறிதாக விளக்கினால் நன்கு பதியவைத்துக்கொள்ளும். பின் பொம்மையை மறக்காது. பொம்மை கிடைக்காவிடில் விம்மி விம்மி அழும். இதேபோல் ஸ்ரீ ராமபிரான் தம் பாலப்பருவத்தில் விளையாட்டில்சந்திரனைக்கையில் கொடுக்க வேண்டுமென்று அழுத விபரீதமொன்று நிகழ்ந்ததும் ஓரே தத்துவம்தான். பாருங்கள் குழந்தைகளின் உள்ளம். ஆராய்ச்சிதான் எதிலும் எங்கும் முக்கிய ஸ்தானம் வகிக்கிறதேயன்றி, வீண்வாதம் வேகடித்தனம் முதலிய அற்ப விஷயங்களில் பொழுது போக்குவது மகா விஷமச் செயல். தம்மைத்தாமே முடிவுசெய்துகொள்ளும் விஷயங்கள் தவளை தன் வாயால் கெட்டகதை போலாகும். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிப்பவர்களின் மூளையை ஒத்திருக்கின்றன இவ்விஷயச் செயல்கள்.

விக்கிரகம் அரும் பெரும் துணையாய் நின்று கடவுளை அடையச்செய்கிறது. இது நிற்க மாந்தர்கள் சிற்றின்ப நுகர்ச்சியுடையவராய் பேரின்பத்தை மறந்து பிரபஞ்ச பந்தங்களில் அகப்பட்டு, உதைப்பட்டு, சிதையுற்று கடு நரகில் உழலுகின்றனர். அந்தோ பாவம்! சுடரும் விளக்கில் ஓடிவிழும் விட்டிலைப்போல நம் பாரத மக்கள் விழுந்து வருந்தி வாடுகின்றனரே! வெள்ளத்துற்குமுன் அணை போடாமல் இருந்துவிட்டனரே! மூப்பில் மூர்ச்சையற்று உயிர்நீப்பதைப் பார்க்கக் கண்கள் கூசுகின்றனவே! சுட்ட களிமண் வேலைக்குதவுமா? அதேபோன்று நம் சகோதரர்கள் இளமையில் வீணே காலம் விரயமாக்கி முதுமையில் வாழ்க்கையின் வெறுப்பை அறிகின்றனர் எவ்வளவு மதியீனம்! கடைசிகாலத்தில் காலன் என்பவன் சூரியன் எல்லும் மாக்கலத்தால் நம்வாழ்நாளை அளந்து பாசக்கயிற்றை வீசுகின்றான். ஒரு பக்கம் பாமகிங்கரர்கள், மறுபக்கம் பார்த்தால் பெண்டு பிள்ளைகள், வீடு, செல்வம், சுற்றத்தார். இவற்றை விட்டு தனியே ஏகயலம் உடைகிறது 'ஈதலின் இன்னாதது இல்லை' என்ற பொய்யில் புலவரின் கூற்று உண்மையாயிற்று. உயிர் ஊசலாடுகிறது. மூளை தளர்கிறது. நாத்தழுத் தழுக்கிறது. இந்த நிலைமையில் கிங்கரர்கள் தங்கள் கயிற்றை இழுக்க உயிர் நீங்குகிறது ஆம் உண்மையில் வேதனைதான். இவ்விதமாகவா காயக் குருபியாகி பாபமூட்டையைக் கட்டிக்கொண்டு தாபப்படுவது மரணவேதனை என்ற பயத்தைப் போக்கிக்கொள்ள ஆவன செய்வதறிஞர் கடன். மாயை அறிவை மறைக்கும் தாயென்றும் பேயென்றும் பாராது வஞ்சம் தீர்த்துக் கொல்லச் செய்யும். அறத்தை மறக்கச் செய்யும். மறத்தை நிலைநிறுத்தும், நல்லவைகளைப் பொல்லாதனவாக்கும் மேலும், "கல்லைக் கடவுளென நில்லையில் தரிசிப்பதைப் பாருங்கள் என எள்ளி நகைக்கச் செய்யும். ஹா ஹா என்ன கொடுமை! மனிதரை மிருகத்தனமான செயல்களையும் கைக்கொள்ளத் தூண்டும். இடர்க்கடலில் ஆழ்ந்தும் முடிவில் அடாது செய்பவர் படாது படுவர், ஆனல் இவ்வடாதசெயல்களைக் கோடரியைக்கொண்டு தறிப்பதைவிட மூளையில் கிள்ளிவிடுவது மேல்.

வேண்டாம், இனியாவது நன்னெறியைக் கடைப்பிடித்து கள், காமம்ஒழித்து பாரில் பாம யாகிகளாகத் துலங்க பாரத மாதாவைப் பணிவுடன் போற்றுவோமாக! சத்திய நெறியில் தவறாதோனே உத்தமனென உரைத்தனர் ஞானியர் நிதியை இழந்தும், நெறியை இழக்காது நின்ற ஹரிச்சந்திரன் தோன்றிய நாடல்லவா நம் பாரத புண்ணியபூமி! வீரவனிதை கற்புடைய[illegible] அவதரித்த தேசம[illegible] ராஜ்யத்தை நிறுவ எவ்வளவோ இடையூறுகளிருக்கக் கண்டும் தம் முயற்சியால் இனிது நிறைவேற்றிய வீர சிவாஜி உதித்த மண்ணல்லவா இப்பாரதமண! இந்துமத தர்மத்தையும், நாகரீகத்தையும் தம் நாவன்மையால் விடாது பிரசங்கமாரி பொழிந்து அன்னியர்களை தம் வசப்படுத்திக்கொண்ட சுவாமி விவேகானந்தர் அவதரித்த பெரும்பாக்யத்தைக் கொண்டதல்லவா நம் பாரதபுண்யபூமி! பின் ஏனோ தயக்கம்? வீரமாந்தர்களே! உண்மைப்பொருளில் அசட்டுத்தனமாக இருப்பது நம் லக்ஷியமல்ல. வெற்றிக்கொடியை நாட்டுவோம் என்பதுதான் நம்வீரவாக்கு. விழித்தெழுங்கள் என்பதுதான் நம் தாரக மந்திரம்.

அனைத்திற்கும் அடிப்படையாய் விளங்கிப் பிரகாசிக்கச் செய்வதுதான் விக்கிரக தத்துவம், ஆம், உண்மை. உண்மையை உள்ளவாறு கடைப்பிடித்து உழவாரத் தொண்டு செய்து இருமையிலும் பொலிவுடன் வறுமையின்றி இன்பமெய்துவோமாக! —தொண்டன

## "இந்துசாதனமில்லாவிடில் யாழ்ப்பாணமே மங்கியிருக்கும்"

[மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. V. வீரசிங்கமவர்கள் B A., J P. தெரிவிக்கின்றார்]

திருவாளர் பண்டிதர் அவர்கள்

"... உங்கள் நெடுங்காலத் தொண்டை நம் ஊரவர்கள் மெச்சியதைப்பற்றிச் சந்தோஷப்படுகிறேன். இந்துசாதனப் பத்திராதிபராகத் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு மிகப்பெரிது. இந்து சாதனமும் நீரும் இல்லாவிட்டால் யாழ்ப்பாணமே மங்கியிருக்கும். நீர் நீடூழி காலம் இத்தொண்டைப் புரியக் கடவுள் கிருபை செய்வாராக".

இப்படிக்கு
வி. வீரசிங்கம்

திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய

### பிரதமவகுப்பு நூல்கள்

1 நாலாந்தரப் பூமிசாத்திரம் (7-ம் பதிப்பு) விலை சதம் 80
2 ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம் (5-ம் பதிப்பு) விலை ரூபா 1
3 நாலாந்தரக் கணிதம (புதிய பதிப்பு) விலை ரூபா 1 35
4 ஐந்தாந்தரக் கணிதம் (புதிய பதிப்பு) விலை ரூபா 1 50
5 இரண்டாம மூன்றாந்தரக் கணிதங்கள் (அச்சில்)
விரைவில் வெளிவரும்

☞ புதியபாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கில பாடசாலைகளில்கல்விபயிலும் தமிழ்ச்சிறார்களுக்கும் உகந்தபாடப்புத்தகங்களாகும்

வட இலங்கா புத்தகசாலை
பெரியதெரு, பருத்தித்துறை.

### நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது
யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
,, நாகபட்டணம் 115
யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம்,
சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு
Std 22 6-6-47—6-6-48

சிங்கப்பூர்—பினங்

### கப்பல் பிரயாண வசதிகள்

நாகபட்டினம் அல்லது மதருஸ் மார்க்கம்

தற்போது எங்கள் பார்ட்டிகளை அவர்கள் விருப்பப்படி நாகபட்டணம் அல்லது மதருஸ் இரு துறைமுகங்கள் மூலமாகவும், மற்றவர்களிலும் பார்க்க மிகவும் குறைந்தசெலவில் கப்பலேற்றி வைக்கிறோமென்பதை எங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

முதல்தரமான பிரயாண வசதிகள்! உன்னதமான சாப்பாடு!!
தங்குமிட வசதிகள்! இருவாரங்களுக்கொரு கப்பல்!!
எங்கள் கடந்தகால சேர்விஸ் பலராலும் போற்றப்பட்டுள்ளது
யாழ்ப்பாணமிருந்து பினங் மதருஸ் மார்க்கம் ரூ. 150
,, ,, நாகபட்டணம் ,, ரூ. 130

மேற்படி இரு சேர்விஸ்களுக்கும் யாழ்ப்பாணமிருந்து மூன்றாவது வகுப்பு றெயில்வே பிரயாணமும் சாப்பாடு, தங்குமிடம் லக்கேச் முதலிய சாமான்களும் ஸ்டீமரில் கொடுக்கும் செலவு யாவும் சேர்க்கப்பட்டுள்ளன.

உங்கள் பணத்திற்கும் பாதுகாப்பிற்கும் நம்பிக்கையான இடம்
பிராஞ்சு: நாகபட்டணம். மதருஸ்.
தந்தி விலாசம்: "சிறீவேல்" புரோப்ரைட்டர்: A. I. காசிலிங்கம்.

ஸ்ரீ கதிர்வேல் அன் கோ,
252, காங்கேசன்துறை ரேட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
Std 33 1—9—47&28-2-48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரநெஞ்சினர்வீரம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

கலையும் ஆக்கிப் பாதுகாத்து வைத்த முனிவர்கள், தொண்டர்கள், யாவரும் தம் நலத்தைப் பலியிட்டு உலக ஆக்கத்திற்காக உழைத்த வீரர்களாவர். தவம் என்பது முயற்சி. எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் பொறுத்துத் தாம் எடுத்துக்கொண்ட புதுப் புனைவுகளை உலகில் நிறுத்தும் வல்லமைப் பாடே தவம். இவ்வாறன்றித் தமது உடம்பு ஒன்றினையே ஓம்புதலை மேற்கொண்டு முயற்சியின்றிப் போலிவேடம் புனைந்து, மற்றைய மக்களை ஏமாற்றி. அவர்கள் செல்வத்தை உறிஞ்சி வாழ்கின்ற போலித் துறவிகளே நாட்டை அழிக்கும் கொடியோராவர். புல்லுருவி, மரத்தின் மேலிருந்து அம்மரத்தின் ஆற்றலைக் குடித்துப் பின் அதனையும் அழித்துத் தானும் ஒழிதல் போலப் போலித்துறவிகளும் தமமை ஆதரிக்கும் மக்கட் கூட்டத்தினரின் செல்வத்தையும் அழித்துத் தாமும் வறிதே நாட்டின் நலத்தினையுங் கெடுத்தொழிவர். இவர்களின் கூட்டம் எந்நாட்டில் மிக்கிருக்கின்றதோ அந்நாடு எந்நாளிலும் மேம்பாடடையாதென்பது திண்ணம் தெய்வ வழிபாட்டையுங் கூட மக்களை வஞ்சித்துத் தம் நலம் போற்றும் அறிவிலிகளும் போலித் தொண்டர்களின் உரிமைப் பொருளாக மாற்றிவிட்டார்கள். அதனால் தெய்வ வழிபாட்டின் உண்மைப் பண்பு மறைந்துவிட்டது. தெய்வம் ஒருசிலரின் உரிமைப் பொருளல்ல. அதன் ஆற்றல் மிகப் பெரிது.

உலகம் தோன்றிய காலந்தொட்டு இன்றளவும் மக்கள் ஆராய்ந்து கண்ட அறிவுக் கலைகள் யாவும் தெய்வ வழிபாட்டின் பெரும் பயன்களாகும். மக்களின் உயர்ந்த புதுப்படைப்புக்களையே அவர்கள் வழிபட்டு வந்தனர். அன்பு தொண்டு, வீரம் என்னும் உயிர்ப் பண்புகளின் உண்மை வெளிப்பாடே உயர்ந்த புதுப்படைப்புக்களாகும். காதலும் வீரமுமே எல்லாவற்றிற்கும் தாயகம். காதலை (அன்பை) வழிபட்டார்கள். வீரத்தை வழிபட்டார்கள். இவை இரண்டினையும் நிலைபெறுத்தும் செயலை (தொண்டினை) வழிபட்டார்கள். வழிபடுதல் என்றால் அவற்றை மேலும மேலும் ஆராய்ந்து புதுக்குதல், விளக்குதல், ஓவியம், காவியம், சிற்பம் என்னுமிவைகளைக் காதலன் கலைவேட்கையின்) தோற்றங்களென்றே கூறலாம். ஒவ்வொரு கலையினும் (அன்பு காதல் இன்றேல் அக்கலை நிலையுறமாட்டா தொழியும். அக்கலைகளை அழிவுபடுத்துநிலை தடைகளை வெட்டி வீழ்த்தும் வீரமும் வேண்டும், ஓர் மக்களினம் அழியும் பொழுது அவ்வினத்தவர்களால் ஆராய்ந்து கண்ட கலைகளும் அழிந்துபோகும். அதன்பொருட்டே அக்கலைகளை, ஓவியமாகவும், காவியமாகவும் சிறபமாகவும் செயலில் தோற்றுவித்து (தொண்டினல்) வழிபட்டு வருகின்றனர் திருக்கோவில் வழிபாட்டின் உண்மை அமைப்பினை உற்று நோக்குவோமாயின் அது, கலை வழிபாட்டிலேயே சென்று முடிதலைக் காண்போம். பல்வேறுபட்ட ஆய்வுக் கலைகளையெல்லாம் தொகுத்து வைத்துப் பாதுகாக்கின்ற கலைக்கோவிலே திருக்கோவிலாகும். கலை அன்பர்களே தெய்வத் தொண்டர்கள். தெய்வத்தின் திருக்கோலத்தைக் கலைக்கோலமாகவே புனைந்துள்ளார்கள், இன்று மேலைநாட்டில் தோன்றி வளரும், விஞ்ஞானக் கலையினை ஆராய்ந்து கண்ட ஒவ்வொரு அறிஞரும் எவ்வளவு அரிய உழைப்பினல் அவ்வக்கலைகளைத் தோற்றிவித்திருக்கின்றனரென்பதைக் கருதுங்கள். அவர்களின் வாழ்நாள் முழுவதையுமே கலையாய்வுக்குப் பயன்படுத்தினர். உறக்கமும் ஊணுமின்றியே இடைவிடாது முயன்றனர். பல துன்பங்களை மேற்கொண்டனர். தம் உயிரையே கலை ஆய்வுக்காகப் பலியிட்டனர். (வரும்)

# இனிச் செய்யவேண்டியது

3-ம் பக்கத் தொடர்ச்சி

அவனுடைய மாசவேதனம் 45 ரூபாவுக்கு மேற்படாது. ஓர் பக்கத்தில் ஒரே ஆண்டவனல் சிருஷ்டிக்கப்பட்ட ஓர்

# இலங்கையில் இந்தியர்

2 ம்பக்கத் தொடர்ச்சி

யாவிலும் குடியேற்ற நாடுகளிலும் நடத்துவதுபோல இலங்கையர் அவர்களை நடத்தவில்லை. இஸ்லாமியர் கொரானை ஒரு கையிலும் மற்றக் கையில் வாளைப் பிடித்துக் கொண்டு அக்காலத்திலும் இக்காலத்திலும் பாமர ஜனங்களைப் பயமுறுத்திச் சமயத்தை மாற்றியவாறு, பிரபஞ்ச உற்பத்தியிலிருந்து இன்றுவரையில் வேருகவிருக்கும இந்தியாவையும் இலங்கையையும் இணைக்க நினைப்பதும் தங்கள் ஸ்தாபனத்திற் சேருமவண்ணம் ஓர் சிலர் கட்டாயப்படுத்துவதும் ஏற்காது. ஒவ்வொரு தேசத்தவரும் தாம தாம் சுயேச்சையாக வாழவேண்டுமென்று நினைப்பதும் தங்கள் தேசத்தின தொழிலைத் தாங்கள் செய்ய விரும்புவதும் சகசம்தானே! இவ்வாறு இலங்கையர் விருமபுவதும் எத்தனிப்பதும் இந்தியரில் பொருமையும் பகையும் கொண்டல்ல வென்று மாபெருந் தலைவராகிய மகாத்மா காந்தயடிகளும் பண்டித ஜவஹர்லால்நேருவும ஒத்துக்கொள்வர். இந்தியாவும் இலங்கையும் ஒற்றுமையாக யிருக்க வேண்டுமன்றி ஒன்றின் இரத்தத்தை மற்றது குடிக்க நினைப்பது சண்டாளத் தனமாகும். இக்கொள்கையை எக்காலத்தும் இலங்கையர் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

இங்ஙனம்,
மு. செல்வநாயகம்.

---

மனுஷன் போகபோக்கியங்களை அநுபவித்து, மாடமாளிகையில் வசித்து இந்திரசுகம் அனுபவிக்கிறன், மற்றப் பக்கத்தில் அதே ஆண்டவனல் படைக்கப்பட்ட ஒருவன், அதே இரத்தம், அதே தசை, என்பு என்பவற்றல் ஆக்கப்பட்ட இன்னொருவன்,

"ஆடெரிபடர்ந்த கோடுய ரடுப்பில்
ஆம்பிபூப்பத் தீம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறும் சுவைதொறும்
பால்காணுது"

குழவி தாய்முகம்நோக்க, மனைவி அவன முகம் நோக்கும் பரிதாப நிலையில் இருக்கிறன். இந்த அநியாயச் சமூக அமைப்புமுறை நாசமாக்கப்படல்வேண்டும் யானைக்கு ஓர்கவளம். ஆனல் அது கோடிக்கணக்கான எறும்புகளைப போஷிக்கப்போதுமானது. இங்கே இந்த இலங்கையில் ஓர் உத்தியோகத்தனுக்குக் கொடுக்கும் பணம் 50 மக்களைப் போஷிக்கப் போதுமானது. எங்கும் சமத்துவம் நிலவவேண்டும், எந்தப் பெரிய உத்தியோகத்தருக்காவது 500 ரூபாவுக்குமேல் மாசவேதனம் கொடுக்கப்பட வொண்ணுது. எந்த ஒருவனுக்காவது 100 ரூபாவுக்குக் குறைய வேதனம் உதவப்படவொண்ணுது. ஒரு மனுஷனுடைய குடும்பச்செலவுக் கேற்றவாறு வேதனம் கொடுக்கவேண்டுமே யன்றி, அவனுடைய வேலையில் வித்தியாசம் பாராட்டி வேதனம் உதவக்கூடாது. இந்த இலங்கையிலே மிஸ்டர் சேனநாயக்காவின் சேவை எவ்வளவு இன்றியமையாததோ, அதிலும் பார்க்க இன்றியமையாதது கக்கூஸ் துப்பரவுசெய்யும் ஓர்தொழிலாளியின் சேவை என்பதை அரசாங்கம் உணரவேண்டும். ஓர் அச்சுக்கூடத்திலே, அச்சடுக்கும் தொழிலாளி தன் கடமையைச் செய்தாற்றன் நூல்கள் வெளிவர, அதன்மூலமாகப் பிள்ளைகள் படிக்க, அப்படிப் படிக்க ஓர் கல்லூரி ஏற்படுத்த, அப்படியான ஓர் கல்லூரிக்கு ஓர் பிரதமாசிரியர் தேவைப்படுகிறர். ஆகவே அந்த அச்சுக்கோக்கும் தொழிலாளிக்கு 40 ரூபாவும் அந்தப் பிரதமாசிரியருக்கு 400 ரூபாவும் ஏன் கொடுக்கப்படவேண்டும்?

நாம்மேலேகாட்டியபடி வருமான விஷயத்தில்சமத்துவம் ஏற்பட்டால், உலகத்திலே களவு [illegible] இராது,

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புகள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

அன்னதேனினுந் தெளிவில் பேதையடி யேம்பிழை யனைத்து முளமேல்
உன்னலே பொறுத்தியென வேசுமர வேளவை யுணர்ந்து நமைநீர்
முன்னமொரு சேயென நினைந்துபொரு நீர்நமது மொய்ம்பு முயர்வும்
இன்னுமுண ரும்படி தெரிந்துமென வோருருவம் எய்தினனரோ.

அப்படியென்றாலும் ஞானமில்லாத அறிவிலிகளாகிய அடியேங்கள் செய்த தவறனைத்தையும் திருவுளத்திற் கொள்ளாது பொறுத்தருள்க என்று தேவர்கள் வேண்ட, குமாரக்கடவுள் அத்தேவர்களுடைய வேண்டுகோளைத் திருவுளத்திற்கொண்டு (அவர்களை நோக்கி) நீவிர் எம்மை முந்தி ஒரு சிறுபிள்ளையென நினைத்து எமக்கு மாருகச் சமர் செய்தீர்கள், எமது பராக்கிரமத்தையும் பெருமையையும நீவிர் மேலும் அறியும்வண்ணம் தெருட்டுவேம் என்றருளி ஒப்பற்ற திருப்பெரு வடிவத்தைக் கொண்டருளினரென்பது கருத்து.

நீவிர் எம்மை முந்தியே உள்ளபடி உணர்ந்திருப்பீரேல் எம்மோடு போர்புரிந்திடமாட்டீர்; எவனே சிறுவனென்றெண்ணியே எம்மொடு சமர் புரிந்தீராதலின் நீவிர் செய்த அபுத்திபூர்வமான தவற்றினைப் பொறுத்துக் கொண்டோமென்பது போதர, "நமை நீர் முன்னமொரு சேயென நினைந்து பொருதீர்" என்றார். இப்பொழுது எம்முடன் பொருது தோல்வியுற்றமையினல் எம்பெருமையைச் சிறிதுணர்ந்துள்ளீ ரெனினும், எம்மிடத்துள்ள சர்வ வல்லமையையும் பரத்துவத்தையும் உங்கட்குத் தெருட்டுவோமாயின நீவிர் எம்மை உள்ளவாறுணர்ந்து வழிபட்டு ஈடேறுவீர் எனக் கருணையினல் எமபெருமான் அத்தேவர்மீது கொண்ட பேரருள் காரணமாகக் கூறினரென்பார். "இன்னு முணரும்படி தெரித்தும்" என்றெனக. ஓருருவு-ஒப்பற்ற பரமேசுவரத திருவடிவம். (87)

எண்டிசையு மீரேழு திறத்துலகு மெண்கிரியுமே ழுகடலுந்
தெண்டிரையு நேமிவரையும பிறவும வேறுதிரிபாகி யுளசீர்
அண்டநிரை யானவு மனைத்துயிரு மெய்ப்பொருளு மாகியயனும்
விண்டுமர னுஞ்செறிய வோருருவு கொண்டனன விறற்குமரனே.

சர்வவல்லமையொடு கூடிய குமாரக்கடவுள் எட்டுத்திக்குகளும், பதினன்குவகைப்பட்ட உலகங்களும், எட்டு மலைகளும், எழுகடல்களும், நன்னீரோடுகூடிய புறவாழியென்னும் சமுத்திரமும், அதனைச் சூழ்ந்துள்ள சக்கரவாளகிரியும், ஏனையவைகளும், வெவ்வேறன மாறுபாடுகளோடு கூடிய அண்டங்களி னடுக்கும், எல்லாவுயிர்களும் எல்லா அசரங்களும் பொருந்தவும், பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் அமையவும் ஒரு திருப்பெருவடிவத்தைக் காட்டியருளினரென்பது கருத்து.

எண்திசைமுதல் அண்டநிரைவரையுமுள்ள படைப்புக் கிரமத்தை இப்புராணத்தில் வரும் அண்டகோசப் படலத்திற் காண்க; சூரபன்மன் வதைப்படலத்தில் இத்திருப்பெருவடிவம் விரித்துக் கூறப்படுதலின் இங்கே சுருக்கிச் சொல்லப்பட்டது; மேலும் இங்குச் சொல்லப்படும் பாரமேசுவரத் திருக்கோலத்திற்கும் சூரபன்மன்வதைப் படலத்திற் சொல்லப்படுந் திருப்பெருவடிவத்திற்குஞ் சிறிது பேதமுண்டெனக் கற்ருேர் கூறுவர்; பதினன்கு உலகங்களும சகல புவனங்களும் ஆங்காங்குள்ள சராசரங்களும் பிரம விஷ்ணு உருத்திராகிய மும்மூர்த்திகளும் இத்திருப்பெருவடிவத்திற் காணப்பட்டன என்றபடி; சருவ வல்லமையுள்ள பெருமானுதலின் இத்திருக்கோலத்தைக் காட்டியருளின ரென்பார் "விறற்குமரன்" என்றார். (88)

# திருச்சி ரேடியோ

புதன் ஜனவரி 7

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 பி முத்துஸ்வாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 சாவித்ரி கணேசன் பாட்டு 9 முடிவு.

1 கதமபம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில செய்திகள் 1 40 பி முததுஸ்வாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 பி முத்துஸ்வாமி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45முடிவு

மாலை 5 ஆழியூர் குஞ்சுமணி வெஙகடராமன் புல்லாஙகுழல் 5 30 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவாளர் திருவாழத்தான் 7 15 சித்திரகானம் இசைத்தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 மதராஸிலுள்ளபடி 8 ஆழியூர் குஞ்சுமணி வெஙகடராமன் புல்லாங்குழல 8 30 சாவித்ரி கணேசன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 கம்ப ராமாயணப் பாடல்கள் 9 30 லண்டனி லிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வாத்ய இசை இசைத்தட்டு 10 இசைவேளை இசைத் தட்டு 10 30 முடிவு.

வியாழன் ஜனவரி 8

காலை 7 15 கீதாரமபம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 காஞ்சீபுரம் எம் என் வெங்கடவரதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 வாத்ய இசை இசைத்தட்டு 8 30 டி ஏ ஞானம்பாள் வீணை 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண் ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 15 நலுங்குப் பாட்டுகள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 டி ஏ ஞானம்பாள் வீணை 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7 15 செய்திவிளக்கம் 7 30 தமிழில செய்திகள் 7 45 மருங்காபுரி ஜி கோபாலகிருஷ்ண ஐயர் வயலின் 9 ஆஙகிலத்தில் செய்திகள் 9 15 எம் கே தியாகராஜ பாகவதர் இசைததட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 காஞ்சீபுரம் எம் என் வெங்கடவரதன் பாட்டு 10 30 முடிவு

---

சூதாடல் இராது; கொலை இராது; சுருங்கக்கூறுங்கால், உலகத்தில் குற்றங்களே இருக்கமாட்டாது.


# தேவை

கோக்குவில் மத்திய ஐக்கிய பண்டசாலைக்கு கணக்கு எழுதக்கூடியவரும் விற்பனவு செய்யக்கூடியவருமாகிய ஒருவர் தேவை. தராதரத்துக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்கப்படும். 15—1—48 க்கு முன் நற்சாட்சிப் பத்திரங்களுடன் காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்யவும்

இங்ஙனம்
வ. ந. மாணிக்கவாசகர்
கௌரவ காரியதரிசி
கோக்குவில் மத்திய ஐக்கிய சங்கம்
2—1—48
M 217 6—9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பலி நிறுத்த

### வீமன்காமம் இளைஞர் சங்கத் தீர்மானம்

வீமன்காமம் இளைஞர் சங்கத்தின் மூன்றுவது வருடாந்தக் கூட்டம் 29-12-47 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் பாரதிவாசகசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. க. செல்லப்பா அவர்கள் தலைமையிற் கூடிற்று. காரியதரிசியினதும் தனதிகாரியினதும் அறிக்கைகள் சபையோரின் ஏகமனதான அங்கீகாரம் பெற்றபின், புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. புது வருடத்திற்கு திரு. எஸ் கே இராசையா அவர்கள் தலைவராகவும், திரு. வே. ஐயாத்துரை அவர்கள் உபதலைவராகவும், திரு. சி. நவரத்தினம் அவர்கள் காரியதரிசியாகவும், திரு. க. நவநாயகம் அவர்கள் தனதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். 9 அங்கத்தினர்களைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

சபையில் பின்வரும் தீர்மானம் பிரேரிக்கப்பட்டு சபையோரின் ஏகமனசாக அங்கீகாரம் பெற்று நிறைவேறியது.

இந்து ஆலயங்களில் ஆடு, கோழி பலியிடும் வழக்கத்தை சட்டமூலம் தடைசெய்யும்படி அரசாங்கத்தைத் தூண்டவேண்டுமென்று விவேகானந்த சபையையும், இந்து மகாசபையையும் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது,

ஈற்றில் எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டபின் 7 மணியளவில் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## அரசினர் சுதேச வைத்தியக்கல்லூரி

இக் கல்லூரியில் சித்த வைத்தியப் பகுதியில் ஆசங்கள் சித்தஞ் செய்தற்காகிய (Demonstrator) ஒரு உத்தியோகத்தர் தேவை

வேதன விபரம்:—660-42-1416 (வருடத்தோறும், விண்ணப்பஞ் செய்பவர், இலங்கை வாசியாய் சித்த வைத்திய மருந்து முறையில் அநுபவம் படைத்தவராய், அந்த முறையில் இரச மருந்துகள் ஆக்கக் கூடியவரா யிருத்தல் வேண்டும்; விண்ணப்ப பத்திரம் அனுப்பும்போது நற்சாட்சிப் பத்திரங்களுடன் இந்த ஜனவரிமீ 12உ க்கு முந்திக் கிடைக்கக்கூடியதாய், பதிவு உத்தியோகத்தர், சுதேச வைத்தியக்கல்லூரி, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்; இன்னும் வேண்டிய விபரங்களை 26-12-47 ல் வெளிவந்த அரசினர் "கஜற்" பத்திரிகை மூலம் அறியலாகும்.

A. N. N. பணிக்கர்

சுதேச வைத்தியக் கல்லூரித் தலைவர்.

கொழும்பு, 22-12-47.

G. 133, 2 5-1-48.

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்


# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்.- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242,ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**

இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**

ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**

இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**

அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**

இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**

ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி

ஏஜெண்டு.

( Std,29 1-8—30-7-48)

# திருவருட்பயன்

**சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)**

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ. வகுப்புகளுக்குச் சமய பாடமாக விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 ( அணா 12 )

**திருக்குறள்** முதல் 20 அதிகாரம்

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழி பெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றுடன்

விலைசதம் 75 (அணா 12)

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும், பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

# இலக்கிய வாசகம்

**மூன்றும் புத்தகம்**

**நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது**

(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்**

சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

**செய்யுட் பாகம்**

பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக் கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதி ஒன்று விலை சதம் 60 (அணா 10)**

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

யாழ்ப்பாணம்

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25

அரைறுத்தலுக்கு ரூபா 12-50

கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

# கந்தசாமி வைத்தியர்

**அமிர்த சர்க்கரை லேகியம்**

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்

-- வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ)


வான்முகில் வழாதுபெய்க மலிவள ஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday. January 6, 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org